பணிப்புரை இல. 43.

## 2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைச் சட்டம்

### 10 (1) (அ) ஆம் பிரிவின் கீழான பணிப்புரை

2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைச் சட்டத்தின் 10(1)(அ) ஆம் பிரிவின் கீழ் உரித்தளிக்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் செயற்படும், பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையானது, மருந்துப் பொருட்களின் மற்றும் விற்றமின்களின் உற்பத்தியாளர்கள், இறக்குமதியாளர்கள் பின்வருவனவற்றை பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைக்கு சமர்ப்பித்தல் வேண்டும் என பணிப்புரை விடுகின்றது.

(அ) மருந்துப் பொருட்களினதும் விற்றமின்களினதும் தற்போதைய சில்லறை விற்பனை விலை ;

(ஆ) மருந்துப் பொருட்களினதும் விற்றமின்களினதும் தற்போதைய சில்லறை விற்பனை விலையின் எத்தகைய மீளாய்வினையும் மீளாய்வு செய்யப்பட்ட விலைகளையும் தொர்குதியிலக்கம், அத்தகைய மீளாய்வு செய்யப்படுவதற்கு முன்னரான அவற்றின் செயற்பாட்டு திகதியையும் குறிப்பிடுதல் ;

(இ) இப்பணிப்புரையின் திகதியை அடுத்து மருந்துப்பொருட்களினதும் விற்றமின்களினதும் உற்பத்தி செய்யப்பட்ட அல்லது மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட விடத்து (அ), (ஆ) வின் பிரகாரம் சமர்ப்பிக்கப்படவேண்டிய தகவல் அத்தகைய மருந்துப் பொருட்கள், விற்றமின்கள் விற்பனைக்குக் கொடுக்கப்படும் முன்னர் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

இப்பணிப்புரை 2013, சனவரி 01 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வருகின்றது.

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் கட்டளைப்படி,

ரூமி மர்சூக்,
தவிசாளர்.

கொழும்பு,
2012, திசெம்பர் 04.

12-511/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.